 සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**60 | T | I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)**

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය **I, II**
**வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II**
Business and Accounting Studies **I, II**

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## வணிகக் கல்வியும் கணக்கீடும் I

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றையும் பின்பற்றுக.

● பின்வரும் சம்பவக் கற்கையை அடிப்படையாகக் கொண்டு **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

சஹ்ரான் என்பவர் அமரபுரம் நகரத்தில் கட்டடமொன்றை வாடகைக்கு எடுத்து 'யாத்திரை' என்ற பெயரில் தொலைபேசிச் சேவை வணிகம் ஒன்றைக் கொண்டு நடாத்துகின்றார். இதற்கு அண்மையில் பிரதேச செயலகம், அமரபுரம் மகா வித்தியாலயம் மற்றும் அமரபுரம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் போன்றவை அமைந்துள்ளன.

**1.** யாத்திரை வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படும் மனிதத் தேவை எது?
(1) போக்குவரத்து
(2) தொலைபேசிச் சேவை
(3) பொழுதுபோக்கு
(4) தொடர்பாடல்

**2.** இலாப நோக்கற்ற, தனியார் துறை வணிக நிறுவனம்
(1) யாத்திரை வணிகம் ஆகும்.
(2) அமரபுரம் மகா வித்தியாலயம் ஆகும்.
(3) அமரபுரம் பிரதேச செயலகம் ஆகும்.
(4) அமரபுரம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகும்.

**3.** சஹ்ரானின் யாத்திரை வணிகத்திற்கு உரித்தான வணிக நிறுவன வகைக்கு அனுகூலமாக அமைவது
(1) சஹ்ரானின் நட்டப்பொறுப்பு வரையறுக்கப்படாமை
(2) சஹ்ரானின் நிதிப் பலம் வரையறுக்கப்பட்டுள்ளமை
(3) சஹ்ரான் சுதந்திரமாகத் தீர்மானங்களை எடுக்க முடியுமாயிருத்தல்
(4) சஹ்ரானின் வணிகத்துக்குத் தொடர்ந்தியங்கும் தன்மை காணப்படாமை

**4.** அமரபுரம் மகா வித்தியாலயமானது சஹ்ரானின் யாத்திரை வணிகத்துக்கு
(1) பலமாகும்.
(2) பலவீனமாகும்.
(3) வாய்ப்பாகும்.
(4) அச்சுறுத்தலாகும்.

**5.** மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையின்படி சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) சஹ்ரான், யாத்திரை வணிகத்தின் அகச்சூழல் காரணி ஆவார்.
(2) யாத்திரை வணிகத்துக்குத் தொடர்ந்தியங்கும் தன்மை காணப்படுகின்றது.
(3) அமரபுரம் பிரதேச செயலகம் ஓர் இலாப நோக்குடைய நிறுவனமாகும்.
(4) யாத்திரை வணிகம் கொண்டு நடாத்தப்படும் கட்டடமானது இவ்வணிகத்தின் உற்பத்திக் காரணியான மூலதனத்துக்கு உரித்தானதாகும்.

6. இலங்கையில் தயாரிக்கப்பட்ட தேயிலையை மத்திய கிழக்கு நாடுகளுக்கு விற்பனை செய்தல் ① .................................. வியாபாரம் ஆகும் என்பதுடன் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து பெற்றோலியத்தைக் கொள்வனவு செய்தல் ②.............................. வியாபாரம் ஆகும்.

இக்கூற்றில் முறையே ① ஆம் ② ஆம் இடைவெளிகளில் உள்ளடக்கப்பட வேண்டிய சரியான பதங்களைக் குறித்து நிற்கும் விடையைத் தெரிவுசெய்க.

(1) இறக்குமதி, ஏற்றுமதி
(2) ஏற்றுமதி, இறக்குமதி
(3) ஏற்றுமதி, வெளிநாட்டு
(4) வெளிநாட்டு, ஏற்றுமதி

7. ஏனைய வங்கிகளை விட உரிமம் பெற்ற வணிக வங்கிகளின் விசேட சிறப்பம்சம்
(1) நடைமுறைக் கணக்குகளைப் பேணுதல்
(2) சேமிப்புக் கணக்குகளைப் பேணுதல்
(3) நிலையான வைப்புக் கணக்குகளைப் பேணுதல்
(4) வைப்புக்களின் மீது கடன்களை வழங்குதல்

8. வணிக வங்கிகளால் வழங்கப்படும் காசோலைகளின் காந்தமைத் தன்மை கொண்ட அடையாள வரிசையில் (M.I.C.R.) முதலாவதாகக் குறிப்பிடப்பட்டிருப்பது யாது?
(1) காசோலை இலக்கம்
(2) வங்கி இலக்கம்
(3) வங்கிக் கணக்கு இலக்கம்
(4) வங்கிக் கிளை இலக்கம்

9. கீழே தரப்படுவது புதினப் பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்ட தலைப்புச் செய்தி ஆகும்.
"அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த பேருந்து ஒன்று தீப்பற்றி எரிந்தது."
இப்புதினப் பத்திரிகையின் தலைப்புச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள போக்குவரத்து அடிப்படைக் கூறுகளை சரியாகக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) வழி, பேருந்து (2) வழி, தரிப்பிடம் (3) வழி, ஊடகம் (4) ஊடகம், பேருந்து

10. ராமன் என்பவர் தனது மனைவி சீதாவுடன் தனது மோட்டார் வாகனத்தில் வேலைத்தளத்துக்குச் செல்வார். இந்த மோட்டார் வாகனமானது வரையறுத்த சுகதா காப்புறுதிக் கம்பனியில் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. இக்காப்புறுதியுடன் தொடர்புபட்ட வகையில் முறையே இச்சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாம், மூன்றாம் தரப்பினரைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) ராமனும் சீதாவும்
(2) ராமனும் வரையறுத்த சுகதா காப்புறுதிக் கம்பனியும்
(3) வரையறுத்த சுகதா காப்புறுதிக் கம்பனியும் மோட்டார் வாகனமும்
(4) வரையறுத்த சுகதா காப்புறுதிக் கம்பனியும் சீதாவும்

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **11, 12, 13** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

நதீஸ் என்பவர் ① **புதிய மாதிரி செல்லிடத்தொலைபேசிகளை** விற்பனை செய்யும் வணிகமொன்றைக் கொண்டு நடாத்துகின்றார். இவர் தனது விற்பனையை அதிகரிப்பதற்காக ② **துண்டுப் பிரசுரம்** ஒன்றை ③ "**விலை குறைக்கப்பட்டுள்ளது!** கடைக்கு வாருங்கள்" எனும் வாசகத்துடன் அச்சிட்டு விநியோகிக்கத் தீர்மானித்தார்.

11. மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் முறையே ①, ②, ③ ஆகிய தடித்த எழுத்துக்களின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள சந்தைப்படுத்தல் கலவையின் மாறிகளாவன
(1) மேம்படுத்தல், விலை மற்றும் மேம்படுத்தல்
(2) உற்பத்திப்பொருள், விலை மற்றும் இடம்
(3) உற்பத்திப்பொருள், மேம்படுத்தல் மற்றும் விலை
(4) இடம், மேம்படுத்தல் மற்றும் விலை

12. மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் காணப்படும் முகாமைத்துவக் கருமம்
(1) திட்டமிடல் (2) ஒழுங்கமைத்தல் (3) நெறிப்படுத்தல் (4) கட்டுப்படுத்தல்

13. நதீஸ் வணிகத்தின் அகச்சூழல் காரணி ஒன்றையும் புறச்சுழல் காரணி ஒன்றையும் முறையே கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) நதிஸ், செல்லிடத்தொலைபேசிகள்
(2) வணிகம், நதீஸ்
(3) நதீஸ், கடைக்கு வருவோர்
(4) விலை, கடைக்கு வருவோர்

14. மொத்த வியாபாரம் தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) மொத்த வியாபாரத்தின் போது சில பொருட்களை மட்டும் விற்பனை செய்ய முடிவதில்லை.
(2) மொத்த வியாபாரியானவர் சில்லறை வியாபாரியுடன் நேரடித் தொடர்பைப் பேணுவார்.
(3) மொத்த வியாபாரியானவர் இறுதி நுகர்வுக்காக பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்வார்.
(4) நுகர்வோருக்கு மிகவும் நெருக்கமான இடத்தில் மொத்த வியாபாரக் களஞ்சியங்கள் அமைந்திருத்தல் வேண்டும்.


අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

15. பின்வருவன இரண்டு முகாமைத்துவக் கருமங்கள் ஆகும்.

A - வணிகத்தின் உற்பத்திப்பொருட்களின் தரத்தை உயர்த்துவதற்காக ஊழியர்களுக்கு அறிவுரைகளை வழங்குதல்

B - ஊழியர்கள் வினைத்திறனாக வேலை செய்வதற்கான சினேகபூர்வமான சூழலை உருவாக்கத் தீர்மானித்தல்

மேலே தரப்பட்ட கருமங்கள் முறையே

(1) திட்டமிடலுக்கும் நெறிப்படுத்தலுக்கும் உரித்தானவையாகும்.
(2) நெறிப்படுத்தலுக்கும் திட்டமிடலுக்கும் உரித்தானவையாகும்.
(3) நெறிப்படுத்தலுக்கும் ஒழுங்கமைத்தலுக்கும் உரித்தானவையாகும்.
(4) கட்டுப்படுத்தலுக்கும் திட்டமிடலுக்கும் உரித்தானவையாகும்.

16. பெரும்பாலானவர்கள் தமது பணத்தைச் சேமிப்புக் கணக்குகளில் வைப்பிலிடவே பெரிதும் விரும்புகின்றனர். இதில் பெரும்பாலும் செல்வாக்குச் செலுத்தும் காரணம்

(1) அரசாங்கத்தின் முழுமையான பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முடிதல்
(2) உயர்ந்த வட்டி வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடிதல்
(3) ஏனைய முதலீட்டு முறைகளை விட உயர்வான திரும்பல் கிடைத்தல்
(4) தேவையான எந்த நேரத்திலும் பணத்தை மீளப்பெறக்கூடியதாக இருத்தல்

17. 'கணக்கீடு' என்பது

(1) வணிகமொன்றில் நிகழும் நிதிக் கொடுக்கல்வாங்கல்களைப் புத்தகங்களில் பதிவு செய்தல்
(2) வணிகமொன்றின் முடிவுகளைக் கணிப்பிடுவதற்குத் தேவையான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல்
(3) வணிகத்தின் மீது அக்கறையுடைய தரப்பினருக்குத் தேவையான தீர்மானங்களை எடுப்பதற்காக பல்வேறு தகவல்களையும் வழங்குதல்
(4) வணிகத்தின் மீது அக்கறையுடைய தரப்பினருக்குத் தேவையான தீர்மானங்களை எடுப்பதற்காக தகவல்களை வழங்கும் செயன்முறை

18. வணிகமொன்றின் நடைமுறையல்லாத பொறுப்பாக அமைவது

(1) மூலதனம்
(2) கடன்கொடுத்தோர்
(3) வங்கிக் கடன்கள்
(4) செலுத்தவேண்டிய மின்சாரக் கட்டணங்கள்

19. செலவுப் பக்கத்தில் அதிகரிப்பு, வரவுப் பக்கத்தில் குறைவுக்கான இரட்டைப்பதிவுத் தத்துவத்துடன் தொடர்புடைய கணக்கு

(1) பெற்ற கழிவுக் கணக்கு
(2) பற்றுக்கள் கணக்கு
(3) வங்கிக் கடன் வட்டிக் கணக்கு
(4) கட்டடக் கணக்கு

20. சமீர் வணிகத்தில் ரூ. 25 000 பெறுமதியான ஒரு தொகை வியாபாரத்திற்கான பொருட்கள் காசுக்குக் கொள்வனவு செய்தலை பதிவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் மூல ஆவணம்

(1) பற்றுச்சீட்டு
(2) கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(3) கொள்வனவுப் பட்டியல்
(4) நாட்குறிப்பு உறுதிச்சீட்டு

21. வணிகமொன்றினால் தயாரிக்கப்பட்ட காசுப் புத்தகத்தில் **காணமுடியாதது** யாது?

(1) பேரேட்டுப் பக்க இலக்கங்கள்
(2) கொடுப்பனவு உறுதிச்சீட்டு இலக்கங்கள்
(3) பற்றுச்சீட்டு இலக்கங்கள்
(4) பட்டியல் இலக்கங்கள்

22. தளபாட வியாபார நிறுவனமொன்றின் கொள்வனவுகள் நாட்குறிப்பில் பதிவு செய்யப்படும் கொடுக்கல்வாங்கல் எது?

(1) ரூ. 50 000 பெறுமதியான கதிரைகள் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டமை
(2) ருவான் என்பவரிடம் இருந்து ரூ. 60 000 பெறுமதியான மேசைகள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டமை
(3) வணிகத்தின் பயன்பாட்டிற்காக ரூ. 75 000 பெறுமதியான மர அலுமாரி கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டமை
(4) உடைமையாளர் தனது தனிப்பட்ட பாவனைக்காக வணிகத்தில் இருந்து ரூ. 80 000 பெறுமதியான கட்டிலைக் கொண்டு சென்றமை

23. வணிகமொன்றின் கணக்கீட்டுச் சமன்பாட்டில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகிய இரண்டினதும் பெறுமதிகளைக் குறைக்கும் கொடுக்கல்வாங்கல்

(1) கடன்பட்டோரிடமிருந்து ரூ. 8 000 பெற்றுக்கொள்ளல்
(2) ரூ. 30 000 பெறுமதியான சரக்குகள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்படுதல்
(3) கடன்கொடுத்தோருக்கு ரூ. 10 000 செலுத்துதல்
(4) வங்கிக் கடன் வட்டி ரூ. 4 000 செலுத்துதல்

[பக். 4 ஐப் பார்க்க

**24.** வணிகமொன்றின் அலுவலகப் பயன்பாட்டிற்காக ரூ. 130 000 பெறுமதியான கணினியை காசுக்குக் கொள்வனவு செய்தலானது தாக்கம் செலுத்துவது
(1) சொத்துக்களில் மட்டும் ஆகும்.
(2) சொத்துக்களிலும் பொறுப்புக்களிலும் ஆகும்.
(3) சொத்துக்களிலும் செலவீனங்களிலும் ஆகும்.
(4) சொத்துக்கள், உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்களில் ஆகும்.

**25.** சுந்தரம் ரூ. 25 000 பெறுமதியான பொருட்களை ரூ. 30 000 இற்கு கடனுக்கு விற்பனை செய்வதால் அவரது வணிகத்தின்
(1) சொத்துக்கள் மற்றும் உரிமையாண்மை ரூ. 5 000 ஆல் மட்டும் குறைவடையும்.
(2) சொத்துக்கள் மற்றும் உரிமையாண்மை ரூ. 5 000 ஆல் மட்டும் அதிகரிக்கும்.
(3) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ரூ. 30 000 ஆல் மட்டும் குறைவடையும்.
(4) சொத்துக்கள் மற்றும் உரிமையாண்மை ரூ. 30 000 ஆல் அதிகரிக்கும்.

**26.** தாமரை என்பவர் ரூ. 10 000 பெறுமதியான பொருட்களை சஹ்ரான் என்பவரிடம் இருந்து காசுக்குக் கொள்வனவு செய்யும்போது 5% வியாபாரக் கழிவைப் பெற்றுக்கொண்டார். இக்கொடுக்கல்வாங்கலுடன் தொடர்புடைய சரியான இரட்டைப் பதிவைத் தெரிவுசெய்க.

(1)

| | | |
|---|---|---|
| கொள்வனவுக் கணக்கு | வரவு | ரூ. 10 000 |
| சஹ்ரான் கணக்கு | செலவு | ரூ. 9 500 |
| பெற்ற கழிவுக் கணக்கு | செலவு | ரூ. 500 |

(2)

| | | |
|---|---|---|
| கொள்வனவுக் கணக்கு | வரவு | ரூ. 10 000 |
| காசுக் கணக்கு | செலவு | ரூ. 9 500 |
| பெற்ற கழிவுக் கணக்கு | செலவு | ரூ. 500 |

(3)

| | | |
|---|---|---|
| கொள்வனவுக் கணக்கு | வரவு | ரூ. 9 500 |
| சஹ்ரான் கணக்கு | செலவு | ரூ. 9 500 |

(4)

| | | |
|---|---|---|
| கொள்வனவுக் கணக்கு | வரவு | ரூ. 9 500 |
| காசுக் கணக்கு | செலவு | ரூ. 9 500 |

**27.** 31.12.2025 இல் இருந்தவாறு ரவி வணிகத்தின் சில்லறைக் காசேட்டின் பகுப்பாய்வு நிரல்களின் மொத்தம் ரூ. 9 500 ஆக இருந்ததுடன், அத்தினத்தில் ரூ. 500 மிகுதியாகக் காணப்பட்டது. 01.01.2026 இல் இருந்து சில்லறைக் காசேட்டை ரூ. 2 000 இனால் அதிகரித்து மீள நிரப்ப ரவி தீர்மானித்தார் எனின், 01.01.2026 இல் சில்லறை காசேட்டை மீள நிரப்புவதற்காக வழங்கப்பட்ட தொகை
(1) ரூ. 2 500 (2) ரூ. 10 000 (3) ரூ. 11 500 (4) ரூ. 12 000

**28.** வங்கிக் கூற்றைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், வணிகத்தின் வங்கிக் கணக்கைச் செம்மையாக்கும்போது அக்கணக்கின் வரவுப் பக்கத்தில் பதியப்படவேண்டிய உருப்படி
(1) வங்கிக் கட்டணங்கள்
(2) வங்கிக் கடன் தவணைக் கட்டணங்கள்
(3) கடன்பட்டோரது நேரடி வைப்புக்கள்
(4) வழங்கப்பட்டபோதும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்

**29.** வங்கியினால் அனுப்பப்பட்ட வங்கிக்கூற்று மீதியை விட வணிகத்தின் வங்கிக் கணக்கின் மீதி அதிகரித்திருப்பதற்கான காரணமாக அமைவது
(1) வங்கி நேரடியாகப் பெற்றுக்கொண்ட பண அனுப்புகைகள்
(2) நிலையியற் கட்டளைகளின் மீது வங்கியால் செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணங்கள்
(3) வங்கி நேரடியாகப் பெற்றுக்கொண்ட முதலீட்டு வருமானம்
(4) வழங்கப்பட்டபோதும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்

**30.** வணிகமொன்றின் கணக்கீட்டில் தவறுகள் நிகழ்ந்தபோதிலும் பரீட்சை மீதியின் சமப்பாட்டைப் **பாதிக்காத** வழு
(1) பிரயாணச் செலவுகள் ரூ. 5 000 அக்கணக்கில் இரு தடவைகள் பதியப்பட்டிருந்தமை
(2) சமன் என்பவருக்குச் செலுத்திய ரூ. 10 000 காசுக் கணக்கில் மட்டும் பதியப்பட்டிருந்தமை
(3) ரூ. 75 000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் ரூ. 57 000 என கொள்வனவுக் கணக்கில் பதியப்பட்டிருந்தமை
(4) அமீர் என்பவரிடம் இருந்து பெற்றுக்கொண்ட ரூ. 30 000 ஆனது அமல் என்பவரின் கணக்கின் செலவுப் பக்கத்தில் பதியப்பட்டிருந்தமை

**31.** கடன்பட்டோரான சமனிடம் இருந்து பெற்றுக்கொண்ட ரூ. 10 000 ஆனது சமன் கணக்கின் வரவுப் பக்கத்தில் பதிந்த தவறைத் திருத்துவதற்குப் பொருத்தமான நாட்குறிப்புப் பதிவைத் தெரிவுசெய்க.

(1)

| | | |
|---|---|---|
| சமன் கணக்கு வரவு | ரூ. 10 000 | |
| தொங்கல் கணக்கு | | ரூ. 10 000 |

(2)

| | | |
|---|---|---|
| தொங்கல் கணக்கு வரவு | ரூ. 10 000 | |
| சமன் கணக்கு | | ரூ. 10 000 |

(3)

| | | |
|---|---|---|
| சமன் கணக்கு வரவு | ரூ. 20 000 | |
| தொங்கல் கணக்கு | | ரூ. 20 000 |

(4)

| | | |
|---|---|---|
| தொங்கல் கணக்கு வரவு | ரூ. 20 000 | |
| சமன் கணக்கு | | ரூ. 20 000 |

[பக். 5 ஐப் பார்க்க



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **32, 33** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

சிறுவர்களுக்கான ஆடைகள் தைக்கும் வணிகமொன்றில் 1000 ஆடைகளைத் தயாரிப்பதற்கான செலவுகள் பின்வருமாறு.

| | ரூ. |
|---|---|
| துணி மற்றும் தையல் நூல் | 100 000 |
| ஆடைகள் தைப்பவர் சம்பளம் | 60 000 |
| மின்சாரச் செலவுகள் | 25 000 |
| கட்டட வாடகை | 15 000 |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் சம்பளம் | 40 000 |
| இயந்திரங்கள் பெறுமானத்தேய்வு | 10 000 |

**32.** இவ்வணிகத்தின் உற்பத்தி மேந்தலைக் கிரயம்
(1) ரூ. 50 000 (2) ரூ. 90 000 (3) ரூ. 160 000 (4) ரூ. 250 000

**33.** இவ்வணிகத்தில் தயாரிக்கப்பட்ட சிறுவர்களுக்கான ஆடை ஒன்றிற்கான உற்பத்திக் கிரயம்
(1) ரூ. 50 (2) ரூ. 90 (3) ரூ. 160 (4) ரூ. 250

**34.** சுதன் விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 80 ஆகும். ஒரு அங்கத்தவருக்கான மாதாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 100 ஆகும். 31.12.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருடாந்த அங்கத்துவக் கட்டணத்தை 50 அங்கத்தவர்கள் மட்டுமே செலுத்தியிருந்தனர். ஏனைய அங்கத்தவர்கள் எந்தவொரு பணத்தையும் செலுத்தவில்லை.
31.12.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கில் பதியப்பட்ட அங்கத்துவக் கட்டணம்
(1) ரூ. 5 000 (2) ரூ. 8 000 (3) ரூ. 60 000 (4) ரூ. 96 000

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **35** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

31.12.2025 இல் இருந்தவாறான நிசான் வணிகத்தின் பரீட்சை மீதி பின்வருமாறு.

| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| கொள்வனவுகள் | 2 000 000 | |
| விற்பனைகள் | | 3 400 000 |
| 01.01.2025 இல் இருந்தவாறு சரக்கிருப்புக்கள் | 100 000 | |
| 01.01.2025 இல் இருந்தவாறு கட்டடங்கள் கிரயத்தில் | 2 500 000 | |
| 01.01.2025 இல் இருந்தவாறு மோட்டார் வாகனங்கள் கிரயத்தில் | 1 000 000 | |
| வங்கிக் கடன்கள் 10% | | 500 000 |
| கடன்பட்டோர் | 100 000 | |
| கடன்கொடுத்தோர் | | 80 000 |
| விளம்பரச் செலவுகள் | 80 000 | |
| ஊழியர் சம்பளம் | 100 000 | |
| வங்கிக் கடன் வட்டி | 10 000 | |
| மின்சார செலவுகள் | 60 000 | |
| மூலதனம் (01.01.2025 இல்) | | 2 000 000 |
| பெற்ற கழிவுகள் | | 20 000 |
| காசு | 50 000 | |
| | 6 000 000 | 6 000 000 |

**மேலதிக தகவல்கள் :**

1. 31.12.2025 இல் இருந்தவாறு சரக்கிருப்புக்கள் ரூ. 900 000 ஆகும்.
2. 31.12.2025 இல் இருந்தவாறு செலுத்த வேண்டிய மின்சார செலவுகள் ரூ. 20 000 ஆகும்.
3. கட்டடங்கள் வருடாந்தம் 8% நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.

[பக். 6 ஐப் பார்க்க

**35.** 31.12.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிசான் வணிகத்தின் மொத்த இலாபம்

(1) ரூ. 1 200 000 (2) ரூ. 1 300 000 (3) ரூ. 1 400 000 (4) ரூ. 2 200 000

**36.** 31.12.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிசான் வணிகத்தின் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலைய நிர்வாகச் செலவுகளின் மொத்தம்

(1) ரூ. 320 000 (2) ரூ. 360 000 (3) ரூ. 380 000 (4) ரூ. 460 000

**37.** 31.12.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிசான் வணிகத்தின் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள சகல செலவுகளினதும் மொத்தம்

(1) ரூ. 450 000 (2) ரூ. 490 000 (3) ரூ. 510 000 (4) ரூ. 560 000

**38.** 31.12.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிசான் வணிகத்தின் தேறிய இலாபம்

(1) ரூ. 930 000 (2) ரூ. 1 690 000 (3) ரூ. 1 710 000 (4) ரூ. 1 720 000

**39.** 31.12.2025 இல் இருந்தவாறு நிசான் வணிகத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் தேறிய புத்தகப் பெறுமதி

(1) ரூ. 3 500 000 (2) ரூ. 3 300 000 (3) ரூ. 3 250 000 (4) ரூ. 2 300 000

**40.** 31.12.2025 இல் இருந்தவாறு நிசான் வணிகத்தின் உரிமையாண்மை

(1) ரூ. 3 720 000 (2) ரூ. 3 710 000 (3) ரூ. 3 690 000 (4) ரூ. 2 930 000

* *

[பக். 7 ஐப் பார்க்க



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

60 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II
**வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II**
Business and Accounting Studies I, II

## வணிகக் கல்வியும் கணக்கீடும் II

**அறிவுறுத்தல்கள் :**

* **முதலாம்** வினா உட்பட, பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும், பகுதி **II** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* அறிவுறுத்தல்களுக்கமைய **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. மேலதிகமாக எழுதப்படும் விடைகள், பரீட்சார்த்தியினால் வெட்டிவிடப்படாத சந்தர்ப்பங்களில் பரீட்சகரினால் புள்ளிகள் வழங்கப்படாமலேயே வெட்டிவிடப்படும்.

**1.** பின்வரும் சம்பவக் கற்கையைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

நிறுவனமொன்றில் தொழில்நுட்பவியலாராகப் பணிபுரியும் தில்லானா என்பவர், 01.01.2026 இல் தனது சொந்தப் பணம் ரூ. 700 000, கணினிகள் ரூ. 216 000 மற்றும் கருவிகளும் உபகரணங்களும் ரூ. 24 000 ஆகியவற்றை முதலீடு செய்ததன் மூலம் 'தில்லானா வணிகம்' எனும் பெயரில் தொழில்நுட்ப உபகரணங்களைத் திருத்தும் வணிகமொன்றினை ஆரம்பித்தார். அதே நாளில் 6% வருடாந்த வட்டியில் வங்கிக் கடனாக ரூ. 200 000 ஐ பெற்றுக் கொண்டார். இந்நாளில் வேறு எதுவித கொடுக்கல்வாங்கல்களும் நிகழ்ந்திருக்கவில்லை.

தில்லானா, தனது வணிகத்தில் தகவல் தொழில்நுட்பக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த சரிகன் என்பவரையும் எதுவித பயிற்சியோ அல்லது வேலை அனுபவமோ இல்லாத கவிந்தன் என்பவரையும் முறையே ரூ. 50 000, ரூ. 20 000 மாதாந்த சம்பளத்தில் ஊழியர்களாக வேலைக்கு அமர்த்திக் கொண்டார்.

தில்லானா வணிகத்தில் 2026 ஜனவரி மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு.

| | ரூ. |
|---|---|
| தொழில்நுட்ப உபகரணங்களைத் திருத்தியதன் மூலம் பெற்றுக் கொண்டவை | 600 000 |
| மாதத்தின்போது திருத்தங்கள் தொடர்பான செலவுகள் | 250 000 |
| செலுத்திய மாதாந்த மின்சாரக் கட்டணங்கள் | 5 000 |
| செலுத்திய மாதாந்த காப்புறுதிக் கட்டணங்கள் | 2 000 |
| செலுத்திய மாதாந்த வாடகைக் கட்டணங்கள் | 12 000 |
| செலுத்திய ஊழியர் சம்பளங்கள் - சரிகன் | 40 000 |
| - கவிந்தன் | 20 000 |
| 31.01.2026 இல் சஹ்ரான் தளபாட நிறுவனத்தில் இருந்து கடனுக்குக் கொள்வனவு செய்த தளபாடங்கள் | 200 000 |

தில்லானா வணிகமானது சமூக ஊடகங்கள் ஊடாக விளம்பரப்படுத்தப்படுவதுடன் நிகழ்நிலையூடாக (online) கட்டளைகள் பெறப்படுகின்றன. அத்துடன் தமது வணிக நிறுவனத்திலும் வீடு வீடாகச் சென்றும் தொழில்நுட்ப உபகரணங்கள் திருத்திக் கொடுக்கப்படுகின்றன.

தில்லானா எப்பொழுதும் ஊழியர்களின் நடவடிக்கைகள் தொடர்பாகத் தேடியறிவதுடன் தேவையானபோது அவர்களுக்குத் தேவையான அறிவுரைகளையும் வழங்குகின்றார். அவர் சகல தொழில்நுட்ப உபகரணங்களையும் தரமாகவும் நியாயமான கட்டணத்திலும் உரிய நேரத்தில் திருத்தம் செய்துகொடுக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றார்.

**மேலதிக தகவல்கள் :**

* கணினிகளின் பயன்படு ஆயுட்காலம் 6 வருடங்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.
* கருவிகளும் உபகரணங்களும் வருடாந்தம் 10% நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(i) (அ) உற்பத்திப்பொருளின் தன்மையின் அடிப்படையில் 'தில்லானா வணிகம்' உரித்தான வணிக வகை எது?

(ஆ) தில்லானா வணிகத்தின் பெயர் பதிவுசெய்யப்பட வேண்டுமா? இதற்கான காரணத்தை எழுதுக.

[பக். 8 ஐப் பார்க்க

(ii) (அ) 'தில்லானா வணிகத்தின்' பலம் ஒன்றையும் பலவீனம் ஒன்றையும் தனித்தனியாக எழுதுக.

(ஆ) 'தில்லானா வணிகத்தினால்' பெற்றுக்கொள்ளப்படும் துணைச் சேவைகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, சம்பவக் கற்கையைப் பயன்படுத்தி அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் எழுதுக.

(iii) (அ) 'தில்லானா வணிகத்துடன்' தொடர்புடைய வகையில் பின்வரும் உற்பத்திக் காரணிகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் எழுதுக.

1. ஊழியம்
2. மூலதனம்

(ஆ) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் உள்ளடங்கியுள்ள பின்வரும் வணிக நடவடிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் உரித்தான முகாமைத்துவக் கருமத்தைக் குறிப்பிடுக.

1. சரிகன், கவிந்தன் ஆகியோரை வணிகத்துக்கான ஊழியர்களாக ஆட்சேர்ப்புச் செய்தமை
2. தில்லானா எப்பொழுதும் வணிக நடவடிக்கைகள் தொடர்பாகத் தேடியறிதல்

(iv) (அ) தில்லானா வணிகத்தின் சந்தைப்படுத்தலுக்கு உரித்தான நடவடிக்கைகள் **இரண்டினை** எழுதுக.

(ஆ) சம்பவக் கற்கையில் உள்ளடங்கியுள்ள முதலீட்டு முறை ஒன்றையும், அதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் திரும்பலையும் குறிப்பிடுக.

(v) 01.01.2026 இல் இருந்தவாறு தில்லானா வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பெறுமதிகளைக் கொண்டதாக எழுதுக.

(vi) (அ) தில்லானா வணிகத்தினால் பயன்படுத்தப்படும் மூல ஆவணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ஆ) மேலே (அ) இல் குறிப்பிட்ட ஒவ்வொரு மூல ஆவணத்திற்கும் சம்பவக் கற்கையில் காணப்படும் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலை எழுதுக.

(vii) 31.01.2026 இல் இருந்தவாறு தில்லானா வணிகத்தின் காசு மீதியைக் கணிப்பிடுக.

(viii) 31.01.2026 இல் முடிவடைந்த மாதத்துக்காக 'தில்லானா வணிகத்தின்' கணினி, கருவிகளும் உபகரணங்களும் ஆகியவற்றின் பெறுமானத்தேய்வைத் தனித்தனியாகக் கணிப்பிடுக.

(ix) 31.01.2026 இல் முடிவடைந்த மாதத்துக்காக தில்லானா வணிகத்தின் வருமானக் கூற்றில் குறிப்பிடப்படும் செலவுகளைப் பெறுமதியுடன் எழுதுக.

(x) 31.01.2026 இல் இருந்தவாறு தில்லானா வணிகத்தின் பின்வரும் உருப்படிகளின் மொத்தத் தொகையைக் குறிப்பிடுக.

(அ) மொத்தச் சொத்துகள்

(ஆ) நடைமுறைப் பொறுப்புகள்

**(02 × 10 = 20 புள்ளிகள்)**

## பகுதி I - வணிகக் கல்வி

(**இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

**2.** (i) தனியுடைமை மற்றும் பங்குடைமை வணிகங்களுக்கிடையிலான வேறுபாடுகள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா, பொய்யா** என்பதனைக் குறிப்பிடுக.

(அ) தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் வித்தியாசமான வழிகள் விருப்பங்கள் ஆகும்.

(ஆ) கொடுக்கப்பட்ட கடன்களைச் சேகரிப்பதற்காக நிதி நிறுவனங்கள் வணிகங்களில் அக்கறை செலுத்துகின்றன.

(இ) சட்டத்தின் முன் பங்குடைமைகள் ஒரு நபராகத் தோன்ற முடியும்.

(ஈ) ஒரு நாட்டின் அரசினால் எடுக்கப்படும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கொள்கைகள் சட்டச் சூழலுக்கு உரித்தானவை ஆகும். (02 புள்ளிகள்)

(iii) பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்காக அவர்கள் சுய வேலைவாய்ப்பில் நுழைவதற்குத் தேவையான பயிற்சிப் பட்டறை ஒன்று கொட்டுவாவி மகா வித்தியாலய அதிபரினால் ஒழுங்குபடுத்தப்பட்டு கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் ஊடாக நடாத்தப்பட்டது.

(அ) இக்கூற்றில் உள்ளடங்கியுள்ள கொட்டுவாவி மகா வித்தியாலயத்தின் அகச்சூழல் காரணியொன்றையும் புறச்சூழல் காரணியொன்றையும் முறையே எழுதுக.

(ஆ) இக்கூற்றில் காணப்படும் பின்வரும் ஒவ்வொரு பொதுத்துறை நிறுவனமும் உரித்தாகும் வணிக நிறுவன வகையைக் குறிப்பிடுக.

1. கொட்டுவாவி மகா வித்தியாலயம்
2. கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

(02 புள்ளிகள்)

[பக். 9 ஐப் பார்க்க



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(iv) பின்வருவன வியாபாரம் தொடர்பான இரண்டு நிகழ்வுகள் ஆகும்.

**A** - தாசன் என்பவர் தனது வீட்டைத் திருத்துவதற்காக சுமதி ஹாட்வெயாரில் இருந்து 10 பைக்கட் சீமெந்தினைக் கொள்வனவு செய்தார்.

**B** - ஜெயசிங்கம் வியாபாரிகள் ரூ. 15 000 பெறுமதியான அரிசியை, உணவுப் பொதிகளைத் தயாரித்து விற்பனை செய்யும் 'தாமரை இலை' என்ற உணவகத்திற்கு விற்பனை செய்தனர்.

(அ) மேலே தரப்பட்ட இரண்டு நிகழ்வுகளிலும் உள்ளடங்கியுள்ள சில்லறை வியாபாரியையும் மொத்த வியாபாரியையும் முறையே குறிப்பிடுக.

(ஆ) தாமரை இலை உணவகத்தின் அக்கறையுடைய தரப்பினர் **இருவரைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

**3.** (i) வரவு அட்டை (Debit card), கடன் அட்டை (Credit card) ஆகியவற்றின் ஒத்த தன்மைகள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா, பொய்யா** என்பதனைக் குறிப்பிடுக.

(அ) நட்டஈடுத் தத்துவமானது ஆதனக் காப்புறுதிக்குப் பொருத்தமானதாகும்.

(ஆ) உரிமம் பெற்ற வணிக வங்கிகளால் காசோலைப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

(இ) நிறுவகமொன்றில் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் செய்திகளையும் தகவல்களையும் பரிமாற்றுதல் அகத் தொடர்பாடல் ஆகும்.

(ஈ) போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் பாதைகள், ஊடகம் என்ற போக்குவரத்து மூலக்கூறுக்கு உரித்தானவையாகும். (02 புள்ளிகள்)

(iii) 30.01.2026 இல் அசித்த திவாகரன் என்பவர் ரூ. 50 000 பெறுமதியான பொருட்களை நிமலன் என்பவரிடம் இருந்து கொள்வனவு செய்தார். இதற்காக முகாமைத்துவ உதவியாளரான கமல் பெர்னான்டோவினால் இலங்கை வங்கி, மஹரகம கிளையின் குறுக்குக் கோடிடப்பட்ட காசோலை ஒன்று எழுதப்பட்டு நிமலனுக்கு வழங்கப்பட்டது. மேலுள்ள தகவலைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) இக்காசோலை தொடர்பில் கட்டளை இடுபவரையும் கட்டளை பெறுபவரையும் முறையே குறிப்பிடுக.

(ஆ) இக்காசோலையை வங்கிக் கருமபீடத்தில் சமர்ப்பித்து பணமாக மாற்ற முடியுமா? உமது விடைக்கான காரணத்தை எழுதுக. (02 புள்ளிகள்)

(iv) குமார் ரூ. 5 000 000 இற்குக் காப்புறுதி செய்த தனது மோட்டார் வாகனத்தை அதிவேக நெடுஞ்சாலையில் செலுத்தியபோது விபத்தில் சிக்கிக் கொண்டதனால் அது சேதமடைந்தது. இச்சந்தர்ப்பத்தில் குமாரின் வாகனம் சேதமடைந்த இடத்திற்கு தற்செயலாக வருகை தந்த குறித்த காப்புறுதிக் கம்பனியினது முகவரொருவர் விபத்துப் பற்றி விசாரணைகளை மேற்கொண்டதுடன், இதற்காக ரூ. 3 000 000 ஐ நட்டஈடாக வழங்கலாமெனத் தெரிவித்தார்.

(அ) இந்நிகழ்வில் குறிப்பிடப்படும் போக்குவரத்து ஊடகம் மற்றும் தொடர்பாடல் ஊடகம் ஆகியவற்றை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

(ஆ) காப்புறுதிக் கம்பனியானது நட்டஈடாக ரூ. 3 000 000 ஐ மட்டுமே செலுத்த முடியுமென குறிப்பிட்டமைக்கான காரணத்தையும் இதனுடன் தொடர்புடைய காப்புறுதித் தத்துவத்தையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

**4.** (i) முகாமைத்துவத்தில் 'கட்டுப்படுத்தல்' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

(அ) ஒவ்வொரு நிறுவனத்திலும் முகாமைத்துவச் செயன்முறை செயற்படுத்தப்படுகின்றது.

(ஆ) சந்தைப்படுத்தல் கலவையின் மாறிகளை நிறுவனத்தால் கட்டுப்படுத்த முடியும்.

(இ) அரசாங்கத்தின் நீண்டகால நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கை மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களை விநியோகிக்கின்றது.

(ஈ) கொழும்பு பங்குச் சந்தையில் சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்வதைவிட வங்கி ஒன்றில் நிலையான வைப்பினை ஆரம்பிப்பது கூடுதலான இடருள்ள முதலீட்டு முறையாகும். (02 புள்ளிகள்)

(iii) பின்வருவன தளபாடங்களைத் தயாரித்து விற்பனை செய்யும் வணிகமொன்றின் சில நடவடிக்கைகள் ஆகும்.

**A** – ஒரே தடவையில் ரூ. 50 000 பெறுமதிக்கு மேல் தளபாடங்களைக் கொள்வனவு செய்யும் போது 20% கழிவுகளை வழங்குதல்

**B** – நவீன வடிவமைப்புகளின்படி தளபாடங்களைத் தயாரித்தல்

**C** – வணிக நிறுவனத்தின் பெயருடன் 20 கதிரைகளை வைத்தியசாலை ஒன்றுக்கு நன்கொடையாக வழங்குதல்

**D** – வணிகத்தின் தளபாடங்களை விற்பனை செய்வதற்கு இரண்டு கடைகளை நடாத்துதல்

மேலே தரப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கையுடனும் தொடர்புடைய சந்தைப்படுத்தல் கலவை மாறியை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

[பக். 10 ஐப் பார்க்க

(iv) சுயதொழிலில் ஈடுபடும் சாமந்தி தனது சொந்தப் பணமான ரூ. 500 000 ஐ பின்வருமாறு முதலீடு செய்தார்.

**A** – ஒவ்வொன்றும் ரூ. 100 பெறுமதியான 2000 சாதாரண பங்குகளை அக்ரா PLC கம்பனியில் வாங்குதல்

**B** – ஒரு வருட முதிர்வுக் காலத்தைக் கொண்ட ரூ. 300 000 பெறுமதியான திறைசேரி உண்டியல்களை மக்கள் வங்கியில் வாங்குதல்

(அ) மேலே தரப்பட்ட ஒவ்வொரு முதலீட்டு முறையிலிருந்தும் தனித்தனியே சாமந்தி பெற்றுக் கொள்ளக்கூடிய திரும்பல்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

(ஆ) மேலே தரப்பட்ட இரண்டு முதலீட்டு முறைகளில் குறைவான இடரைக் கொண்ட முதலீட்டு முறையைக் குறிப்பிட்டு, அதற்கான காரணத்தை எழுதுக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

## பகுதி II - கணக்கீடு

(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

**5.** (i) கணக்கீட்டில் மூல ஆவணங்களைப் பயன்படுத்துவதன் மூலம் வணிகமொன்று பெற்றுக்கொள்ளத்தக்க நன்மைகள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) வணிகமொன்றின் காசேட்டின் வரவுப் பக்கத்தில் பதியப்படும் கொடுக்கல்வாங்கல்கள் **நான்கினைப்** பெறுமதிகளுடன் எழுதுக. (02 புள்ளிகள்)

(iii) பின்வருவன மாலினி வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் இரண்டு கொடுக்கல்வாங்கல்கள் ஆகும்.

| கொடுக்கல் வாங்கல் இல. | சொத்துகள் | | = உரிமையாண்மை (ரூ.) | + பொறுப்புகள் | |
|---|---|---|---|---|---|
| | சரக்கிருப்பு (ரூ.) | காசு (ரூ.) | | கடன்கொடுத்தோர் (ரூ.) | வங்கிக் கடன் (ரூ.) |
| (1) | + 25 000 | | | + 25 000 | |
| (2) | | - 20 000 | | | - 20 000 |
| (3) | | | | | |
| (4) | | | | | |

**வேண்டப்படுவது :**

(அ) மேலுள்ள (1), (2) ஆகிய கொடுக்கல்வாங்கல்களைப் பெறுமதிகளுடன் எழுதுக.

(ஆ) பின்வரும் (3), (4) ஆகிய கொடுக்கல்வாங்கல்கள் மாலினி வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதனை மேலே தரப்பட்ட மாதிரியின்படி குறிப்பிடுக.

(3) - ரூ. 30 000 பெறுமதியான பொருட்கள் ரூ. 35 000 காசுக்கு விற்பனை செய்யப்படல்

(4) - வணிகத்தின் காப்புறுதிக் கட்டணங்களாக ரூ. 10 000 ஐச் செலுத்துதல் (04 புள்ளிகள்)

(iv) பின்வருவன ஜீவன் வணிகத்தில் 2025 டிசம்பர் மாதத்தில் நிகழ்ந்த கொள்வனவுகள் ஆகும்.

02.12.2025 - பட்டியல் இல. 118 இன் கீழ் நாவலனிடமிருந்து ரூ. 75 000 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

10.12.2025 - பட்டியல் இல. 120 இன் கீழ் சாலினியிடமிருந்து ரூ. 50 000 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

15.12.2025 - கொடுப்பனவு உறுதிச்சீட்டு இல. 113 இன் கீழ் ரூ. 60 000 காசுக்கு சுகாதா வியாபாரிகளிடம் இருந்து பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

21.12.2025 - பட்டியல் இல. 202 இன் கீழ் 10% வியாபாரக் கழிவில் கமாலிடமிருந்து ரூ. 30 000 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

28.12.2025 - கொடுப்பனவு உறுதிச்சீட்டு இல. 115 இன் கீழ் ரூ. 20 000 இற்கு சுப்பர் ஹவுஸிடமிருந்து பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

**வேண்டப்படுவது :**

(அ) 2025 டிசம்பர் மாதத்துக்கான ஜீவன் வணிகத்தின் கொள்வனவு நாட்குறிப்பைத் தயாரிக்குக.

(ஆ) ஜீவன் வணிகத்தின் கொள்வனவுக் கணக்கைத் தயாரித்து, 31.12.2025 இல் இருந்தவாறான கொள்வனவின் மொத்தத் தொகையைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI

[பக். 11 ஐப் பார்க்க



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



6. (i) வங்கியானது காசோலைகளை மறுப்பதற்கான சந்தர்ப்பங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ii) பின்வருவன சந்துரு வணிகத்தின் ஒரு மாதத்தின் போது 1000 உருளைக்கிழங்கு இனிப்புப் (potato toffees) பைக்கட்டுகளைத் தயாரிப்பதற்கான செலவுகள் ஆகும்.

| | ரூ. |
|---|---|
| உருளைக்கிழங்கு | 29 000 |
| சீனி | 6 000 |
| மின்சாரச் செலவுகள் | 5 000 |
| உருளைக்கிழங்கு இனிப்புத் தயாரிப்பவர் சம்பளம் | 20 000 |
| ஏனைய நேரில் செலவுகள் | 8 500 |

**மேலதிக தகவல்கள் :**

- உருளைக்கிழங்கு இனிப்பு தயாரிக்கும் இயந்திரத்தின் கிரயம் ரூ. 150 000 ஆகும்.
- உருளைக்கிழங்கு இனிப்பு தயாரிக்கும் இயந்திரமானது வருடாந்தம் நேர்கோட்டு முறையில் 12% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.
- இலாப எல்லை கிரயத்தின் மீது 10% ஆகும்.

**வேண்டப்படுவது :**

(அ) உருளைக்கிழங்கு இனிப்பு உற்பத்திக்கான மூலக் கிரயம்

(ஆ) உருளைக்கிழங்கு இனிப்பு பைக்கட் ஒன்றின் விற்பனை விலை (02 புள்ளிகள்)

(iii) 31.12.2025 இல் இருந்தவாறு கிருஷ்ணா வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியானது சமப்படாததுடன், பின்னர் பின்வரும் கணக்கீட்டு வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

1. காசு விற்பனைகள் ரூ. 50 000 ஆனது விற்பனைக் கணக்கில் ரூ. 5 000 எனப் பதியப்பட்டிருந்தது.
2. இயந்திர திருத்தச் செலவுகளுக்கான கொடுப்பனவு ரூ. 10 000 இயந்திரக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
3. செலுத்திய வட்டி ரூ. 12 000 பெற்ற வட்டிக் கணக்கின் செலவுப் பக்கத்தில் பதியப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது :**

(அ) மேலுள்ள தவறுகளைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்

(ஆ) 31.12.2025 இல் இருந்தவாறு பரீட்சை மீதியில் வித்தியாசத்தைக் காட்டும் தொங்கல் கணக்கு (04 புள்ளிகள்)

(iv) நாரதர் வணிகத்தின் 2026 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கணக்கும் வங்கிக் கூற்றும் கீழே தரப்பட்டுள்ளன.

**வங்கிக் கணக்கு**

| திகதி | விபரம் | பே.ப | பெறுமதி (ரூ.) | திகதி | விபரம் | பே.ப | பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| 01.01.2026 | மீதி கீ.கொ.வ | | 10 000 | 02.01.2026 | மின்சாரம் (452200) | | 3 000 |
| 03.01.2026 | வைப்பிலிட்ட காசு | | 5 000 | 04.01.2026 | சமீர (452201) | | 15 000 |
| 06.01.2026 | வைப்பிலிட்ட காசோலை (204) | | 18 000 | 08.01.2026 | சம்பளம் (452202) | | 8 000 |
| 09.01.2026 | வைப்பிலிட்ட காசோலை (500) | | 9 000 | 30.01.2026 | குமார் (452203) | | 7 000 |
| | | | | 31.01.2026 | மீதி கீ.கொ.செ | | 9 000 |
| | | | 42 000 | | | | 42 000 |
| 01.02.2026 | மீதி கீ.கொ.வ | | 9 000 | | | | |

**2026 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கூற்று**

| திகதி | விபரம் | வரவு (ரூ.) | செலவு (ரூ.) | மீதி (ரூ.) |
|---|---|---|---|---|
| 01.01.2026 | மீதி | - | - | 10 000 |
| 03.01.2026 | காசோலை - 452200 | 3 000 | - | 7 000 |
| 03.01.2026 | காசு வைப்பு | - | 5 000 | 12 000 |
| 06.01.2026 | காசோலை வைப்பு - 204 | - | 18 000 | 30 000 |
| 08.01.2026 | காசோலை - 452202 | 8 000 | - | 22 000 |
| 20.01.2026 | காசோலைப் புத்தகக் கட்டணங்கள் | 1 000 | - | 21 000 |
| 30.01.2026 | காசோலை - 452203 | 7 000 | - | 14 000 |
| 30.01.2026 | கடன்பட்டோரின் நேரடி வைப்பு | - | 12 000 | 26 000 |

**வேண்டப்படுவது :**

(அ) 31.01.2026 இல் இருந்தவாறு நாரதர் வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதியைச் செம்மையாக்குக.

(ஆ) 31.01.2026 இல் இருந்தவாறு நாரதர் வணிகத்தின் வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றைத் தயாரிக்குக. (04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

[பக். 12 ஐப் பார்க்க

7. (i) 'செலுத்த வேண்டிய செலவுகள்' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) சக்தி நலன்புரிச் சங்கத்தின் பொருளாளரால் 31.12.2025 இல் முடிவடைந்த வருடத்திற்காகக் கணிப்பிடப்பட்ட பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் சுருக்கம் பின்வருமாறு.

| | ரூ. |
|---|---|
| பெற்றுக்கொண்ட அங்கத்துவக் கட்டணங்கள் ........................... | 52 000 |
| சஞ்சிகை அச்சடித்தலுக்காக ........................... | 18 000 |
| சஞ்சிகை விற்பனையில் இருந்து ........................... | 30 000 |

**மேலதிக தகவல்கள் :**

- வருமதியாகவுள்ள அங்கத்துவக் கட்டணங்கள் ரூ. 3 000

**வேண்டப்படுவது :**

31.12.2025 இல் முடிவடைந்த வருடத்திற்காக வருமானச் செலவுக் கணக்கைத் (வருமானக் கூற்று) தயாரிக்குக. (02 புள்ளிகள்)

(iii) 31.12.2025 இல் இருந்தவாறு சுசான் சில்லறை வணிகத்தின் பரீட்சை மீதி பின்வருமாறு.

| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| மூலதனம் ........................... | | 400 000 |
| காசு ........................... | 20 000 | |
| வங்கிக் கடன் 8% ........................... | | 100 000 |
| கடன்பட்டோர் ........................... | 22 000 | |
| கடன்கொடுத்தோர் ........................... | | 25 000 |
| அறவிடமுடியாக் கடன்கள் ........................... | 1 200 | |
| மோட்டார் வாகனம் (கிரயத்தில்) ........................... | 250 000 | |
| காணி (கிரயத்தில்) ........................... | 400 000 | |
| வங்கிக் கடன் வட்டி ........................... | 3 000 | |
| நிர்வாகச் சம்பளம் ........................... | 15 000 | |
| மின்சாரக் கட்டணங்கள் ........................... | 8 500 | |
| 01.01.2025 இல் இருந்தவாறு சரக்கிருப்பு ........................... | 4 000 | |
| கொள்வனவுகள் ........................... | 140 000 | |
| விற்பனைகள் ........................... | | 350 000 |
| உள்வந்தவண்டிக் கூலி ........................... | 8 000 | |
| பெற்ற வாடகை ........................... | | 5 000 |
| விளம்பரச் செலவுகள் ........................... | 4 500 | |
| ஏனைய செலவுகள் ........................... | 2 000 | |
| காப்புறுதிக் கட்டணங்கள் ........................... | 1 800 | |
| | 880 000 | 880 000 |

**மேலதிக தகவல்கள் :**

- 31.12.2025 இல் இருந்தவாறு சரக்கிருப்பு ரூ. 40 000
- மோட்டார் வாகனங்கள் வருடாந்தம் நேர்கோட்டு முறையில் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.
- 31.12.2025 இல் இருந்தவாறு செலுத்த வேண்டிய காப்புறுதிக் கட்டணம் ரூ. 1 200

**வேண்டப்படுவது :**

(அ) 31.12.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கான சுசான் வணிகத்தின் இலாப நட்டக் கூற்று (04 புள்ளிகள்)

(ஆ) 31.12.2025 இல் இருந்தவாறான சுசான் வணிகத்தின் நிதி நிலைமைக் கூற்று (04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

* * *

0001470

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න